


தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (23.10.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம் புது தில்லியில் 22.10.2024 அன்று குடியரசு தலைவர் அவர்களால் தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை திருச்சி மண்டலம், புதுக்கோட்டை மாவட்டம், தெற்கு வெள்ளாறு வடிநில கோட்டம் பரம்பூர் பெரிய கண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நீர்மேலாண்மைக்கான ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்தின் தேசிய நீர் விருது 2023 ஐ காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின் போது நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சங்கத்தின் தலைவர் ப. பொன்னையா, ஆட்சி மன்ற உறுப்பினர் ரா. பழனிசாமி, நீர்வளத் துறை செயற்பொறியாளர் திருமதி வே. கனிமொழி, நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் சா. மன்மதன் ஆகியோர் உடனிருந்தனர்.



கலைஞர் தொலைக்காட்சி தலைமை செய்தி ஆசிரியர் ப.திருமாவேலனின் தாயார் அண்மையில் மறைவெய்தினார். கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற தி.மு.க. குழு பொருளாளர் ஜெகத்ரட்சகன் ஆகியோர் திருமாவேலன் இல்லம் சென்று அவரது தாயார் மறைந்த ப.முத்துலக்குமி அம்மையார் திருவுருவப் படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

## ஒரு சிறு குழந்தையின் ஏக்கம்!



**அன்புள்ள கலைஞர் தாத்தா,**

48 ஆண்டுகளுக்கு முன்னால் ரயில் நிலையத்தில் என் தாத்தா செய்தித்தாள்களை விற்றுக்கொண்டிருந்தார். ஒரு முறை ரயிலிலிருந்து என் தாத்தாவை நீங்கள் அழைத்து, எல்லாச் செய்தித்தாள்களிலும் ஒவ்வொன்று கொடுக்கச் சொன்னீர்கள். ஒரு ரூபாய், பத்து பைசா என்று தாத்தா உங்களிடம் கையை நீட்டினார். "என்ன தம்பி, விரல் எல்லாம் மையா இருக்கு" என்று நீங்கள் கேட்டீர்கள். "பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார் என் தாத்தா. உடனே தாங்கள் 2 ரூபாயைக் கொடுத்து, "மீதிப் பணத்தில் மை கசியாத நல்ல பேனா வாங்கிக்கொள்" என்று சொன்னீர்கள். 'கறுப்புக் கண்ணாடிக்குள் அன்று கருணையான கண்களைக் கண்டேன்' என்று என் தாத்தா அடிக்கடி இந்த நிகழ்வைக் கூறுவார். தங்களைக் காண நானும் தாத்தாவும் சென்னைக்கு வந்தோம். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தங்களைப் பார்த்தபோது, நேரில் பார்க்க முடியவில்லையே என்கிற ஏக்கம் அதிகமாகிவிட்டது, கலைஞர் தாத்தா!

தங்களை என்றும் மறவாத,
**யூ.காட்வின் பிரிட்ஜோ,**
**5ம் வகுப்பு, ஸ்ரீ காமராஜர் மெட்ரிக் பள்ளி, திண்டுக்கல்.**
**நன்றி : இந்து தமிழ் திசை** 23.10.2024



தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் மறைந்த கும்மிடிப்பூண்டி கி.வேணு அவர்களின் மகள் திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி இல்ல திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மாவட்டக் கழகச் செயலாளர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, நே.சிற்றரசு, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் பி.ஜெ.மூர்த்தி, கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கி.வே.ஆனந்த் குமார், பூண்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.கே.சந்திரசேகரன் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் குடும்பத்தினர்கள் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!



## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன், தி.மு.க இளைஞர் அணி நடத்தும் 'என் உயிரினும் மேலான..!' பேச்சுப் போட்டியில், மண்டல அளவில் 913 பேர் கலந்துகொண்டனர். அந்தப் போட்டிகளில் தேர்வான 182 பேருக்கு மாநில அளவிலான இறுதிப் போட்டி கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

**26-10-2024, சனிக்கிழமை**

| வருவாய் மாவட்டம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் |
|---|---|---|
| சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுச்சேரி, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், கரூர், திருப்பூர், கோவை | அன்பகம், தி.மு.க. இளைஞர் அணி அலுவலகம். 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18. | திண்டுக்கல் ஐ.லியோனி, கோவி.லெனின், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| ஈரோடு, நீலகிரி, திருச்சி, பெரம்பலூர், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி | சர்.பிட்டி.தியாகராயர் அரங்கம், தியாகராய நகர், சென்னை-17 | முனைவர் சபாபதி மோகன், நாஞ்சில் சம்பத், வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, கா.அமுதரசன் |

**பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகள் :**

● இறுதிப் போட்டிக்கு வரும் போட்டியாளர்கள் 25–10–2024 மாலைக்குள் சென்னை வந்து சேர வேண்டும். ● போட்டியாளர்கள் பெற்றோர்களில் ஒருவரை உடன் அழைத்து வரலாம். ● 25.10.2024 மாலை முதல், பரிசளிப்பு விழா நடைபெறும் 27.10.2024 மதியம் வரை போட்டியாளர்கள் அவசியம் சென்னையில் இருக்க வேண்டும். போட்டியாளர்களுக்கும் உடன் வரும் ஒரு நபருக்கும் மூன்று நாள்களுக்குத் தங்குமிடமும், உணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

● 26–10–2024 அன்று சரியாக காலை 9 மணிக்கு மாநில அளவிலான இறுதிப்போட்டி தொடங்கும்.

● **என்றென்றும் பெரியார்-ஏன்?** ● **அண்ணாவும் மாநில சுயாட்சியும்** ● **கலைஞர் - நவீன தமிழ்நாட்டின் சிற்பி**
● **திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின்** ● **தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தி.மு.க**

● மேற்கண்ட ஐந்து தலைப்புகளில் நடுவர்கள் தேர்ந்தெடுத்த ஒரு தலைப்பின்கீழ், போட்டியாளர்கள் பேச வேண்டும். எனவே ஐந்து தலைப்புகளில் எந்தத் தலைப்பைக் கொடுத்தாலும் பேசுவதற்கு ஏற்ற வகையில், போட்டியாளர்கள் தயார் செய்து கொள்ளவும். ● பேசுவதற்கான கால அளவு 5 நிமிடங்கள். மூன்று நிமிடங்கள் முடிந்ததும் முதல் எச்சரிக்கை மணி ஒலிக்கும். இரண்டாவது எச்சரிக்கை மணி ஒலித்ததும், போட்டியாளர்கள் தங்கள் உரையை நிறைவு செய்யவேண்டும்.

**போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் அன்பும் வாழ்த்தும்.**

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 23–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி